**DEPOSITION OF WITNESS**
Chapter XXIII Code of Criminal Procedure.)
\- - - - -

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT MADHAVARAM.**

Calendar :
Miscellaneous : **CC. 318/2020**

Preliminary Register :
Sessions :
PW 5
Deposition of witness for :

Name : Suresh

Father's Name : Selvaraj

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :34

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02/03/2023.

**(எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது தண்டையார்பேட்டையில் உள்ள சாஸ்திரி நகரில் வசித்து வருகிறேன். நான் ஒரு தனியார் கம்பெனியில் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது மாமியார் வீடு அமைந்துள்ள காம்பவுண்டில் எதிரியின் வீடும் உள்ளது. அந்த வகையில் அவரை எனக்கு தெரியும். கடந்த 30.06.2017 அன்று நான் எனது கம்பெனியில் இருந்தபோது மதியம் சுமார் 2 மணியளவில் எனது மாமியார் எனக்கு போன் செய்து உடனே என்னை வீட்டிற்கு வருமாறு கூறினார். அதன் பின் நான் கிளம்பி மணலியில் உள்ள என்னுடைய மாமியார் வீட்டிற்க்கு சுமார் 45 நிமிடங்களில் சென்று விட்டேன். அப்போது தரைதளத்தில் எனது மாமியார் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளரின் வீடு இருந்தது. எனது மாமியார் வீடு முதல் தளத்தில் இருக்கும். நான் செல்லும்போது தரைதளத்தில் உள்ள வீட்டு உரிமையாளரின் வீட்டில் எனது மாமியார், மாமனார், ரஞ்சினி பிரியா( எனது மனைவியின் தங்கை ), வீட்டு உரிமையளாரான தேன்மொழி என்பவரும் இருந்தார்கள்.எனது மாமியார் , மாமனார் மற்றும் ரஞ்சினி பிரியா ஆகியோர் அழுதவாறு இருந்தனர். என்ன நடந்தது

என்று நான் அவர்களிடம் கேட்டேன் அப்போது ரஞ்சினிபிரியா என்னிடம் , தான் முதல் தளத்தில் உள்ள அவரது வீட்டிற்கு வெளியே உள்ள கழிவறையில் குளித்து கொண்டிருந்தபோது ஜன்னல் வழியாக தன்னை ஆஜர் எதிரி பார்த்து கொண்டிருந்ததாகவும் என்னிடம் கூறினார். ஆஜர் எதிரியை அவ்வாறு பார்த்தவுடன் ரஞ்சினிபிரியா கத்தி அழுததாகவும் அவ்வாறு அவர் அழும் சத்தம் கேட்ட எதிரி கழிவறையின் முன்பக்கம் வந்து கழிவறையின் கதவை தட்டி தான் பார்த்ததை யாரிடமும் சொல்லகூடாது என்று கூறியாதகவும். அப்போது பயத்தில் ரஞ்சினிபிரியா சத்தம் போட்டு மேலும் அழவே அந்த சத்தம் கேட்ட வீட்டின் உரிமையாளரான தேன்மொழி என்பவர் முதல் தளத்தில் கழிவறைக்கு வந்து துண்டினை போர்த்தி ரஞ்சினிபிரியாவை தரை தளத்தில் உள்ள அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றதாகவும் அப்போது ஆஜர் எதிரி அருகாமையில் இருந்த சுவரில் ஏறி குதித்து ஓடியதாகவும் என்னிடம் ரஞ்சினிபிரியா கூறினார். அதன் பிறகு நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் எனது மாமியார் புகார் அளித்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நடந்த சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது ஆனால் ரஞ்சினிபிரியா கூறிதான் நடந்த சம்பவம் குறித்து எனக்கு தெரியும். எனது மாமியார் குடியிருக்கும் வீட்டில் முதல் தளம் வரை தான் வீடு உள்ளது. வாரம் ஒரு முறை நான் எனது மாமியார் வீட்டிற்கு சென்று வருவேன். எனது மாமியார் வீட்டின் உள்ள முதல் தளத்தில் தனியாக கழிவறை உள்ளது. தரை தளத்தில் தனியாக கழிவறை உள்ளது. எனது மாமியார் வீட்டின் தரை தளத்தில் உள்ளவர்களுக்கு என்னை தெரியாது என்று சொன்னால் சரியல்ல.எனது மாமியார் எனக்கு போன் செய்தவுடன் 45 நிமிடத்தில் நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். ரஞ்சினிபிரியா என்பவர் எனது மனைவியின் தங்கை என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எனது மாமியார் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**